# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **19 மே 2019** | **பாஸ்கு காலம் - ஐந்தாம் ஞாயிறு** | **மூன்றாம் ஆண்டு** |



## உங்கள் சிந்தனைக்கு...

அன்பு சகோதர சகோதரிகளே! பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறுக் கொண்டாடங்களில் கலந்து இயேசுவின் புதிய கட்டளையை அறிந்து கொள்ள ஆவலுடன் வந்துள்ள உங்கள் அனைவருக்கும் உயிர்த்த ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் அன்பு வாழ்த்துக்கள்!

நம் வாழ்க்கையே ஒரு பயணம் தான். இந்தப் பயணத்தில் நாம் மகிழ்வோடு பயணிக்க வேண்டுமென்றால் தியாக அன்பு நம் அனைவரிலும் இருக்க வேண்டும். “நான் உங்களை அன்பு செய்தது போல நீங்களும் ஒருவரையொருவர் அன்பு செய்யுங்கள்” என்ற இயேசுவின் அன்புக் கட்டளையை இன்றைய நற்செய்தி எடுத்துரைக்கின்றது.

பவுலும் பர்னபாவும் மனம் தளர்ந்தவர்களுக்குத் 'துன்பங்கள் வழியே தாம் இறையரசுக்குள் நுழைய முடியும்' எனக் கற்பிக்கின்றனர். செபித்து, நோன்பிருந்து, இறைவனுக்கு ஒப்புக்கொடுத்து தலைவர்களை நியமிக்கின்றனர். இதில் இவர்கள் தங்கள் மக்கள்மேல் கொண்டிருந்த அக்கறையும், பொறுப்புணர்வும் தெரிகிறது. இப்படியாக, இயேசுவின் புதிய கட்டளையை வாழ்ந்துக் காட்டி, அன்பின் வழியாகத் தாங்கள் இயேசுவின் சீடர்கள் என்பதற்குச் சான்றுப் பகர்கின்றனர். இந்த அன்புக் கட்டளையை நாம் எப்படி வாழ்வது? என்ற கேள்விக்குப் பதில் தருகிறது இன்றைய இரண்டாம் வாசகம் (திவெ 21:1-5). இன்றைய இரண்டாம் வாசகத்தில், புதிய வானகமும், புதிய வையகமும் இறங்கி வருவதைக் காட்சியில் காண்கின்றார் யோவான். அவர் கூறும் ஐந்து கருத்துக்கள்.
1. அன்பின் முதற்படி தீமையைக் களைவது. 2. இதோ நான் அனைத்தையும் புதியனவாக்குகிறேன். 3. இனி கடவுளின் கூடாரம் மனிதர்கள் நடுவே! . 4. இறைவன் அவர்களோடு! 5. அவர்கள் கண்ணீர் அனைத்தையும் துடைத்துவிடுவார். அன்பின் கரம் பிறரின் கண்ணீர் துடைக்க வேண்டும்.

இயேசுவின் கட்டளையை மனதில் கொண்டு, பர்னபா, பவுல் இவர்களைப் போல நம்மையே இறைவனுக்கு அர்ப்பணிப்போம். அதற்கான இறையருளைப் பெற வேண்டி இன்றைய திருப்பலிக் கொண்டாடங்களில் தந்தையிடம் மன்றாடுவோம்.

## ஆலயப் புதுப்பிக்கும் பணிக்கான நிதி சேகரிப்பு



அன்பார்ந்தவர்களே! நமது தூய லூர்து அன்னை ஆலயப் புதுப்பிக்கும் பணிகள், வருகின்ற ஜூலை மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காக உங்கள் நன்கொடைகளை காசோலை மூலமாக “Church of Our Lady of Lourdes” என்ற பெயருக்கு வழங்கலாம். காசோலையின் பின்புறத்தில் “Building Fund” என்று குறிப்பிடவும். தாராள மனதுடன் உங்கள் நன்கொடைகளை அளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## பொது விடுமுறைத் திருப்பலி நேரம்

**20-05-2019 திங்கள் - விசாக தினம்**




காலை 10 மணிக்குத் தமிழ் திருப்பலி
(மதியம் 12மணி முதல் நம் ஆலய வளாகத்தின்இரும்புக் கதவுகள் மூடப்பட்டிருக்கும்.)
அன்று நம் பங்கு அலுவலகத்திற்கு விடுமுறை

## இயேசுவின் விண்ணேற்புப் பெருவிழா (கடன் திருநாள்)

**திருப்பலி நேரங்கள்**




**29-05-2019 (புதன்):**
மாலை 6:30 மணி (ஆங்கிலம்), இரவு 8:00 மணி (தமிழ்)

**30-05-2019 (வியாழன்):**
மதியம் 2:30, மாலை 6:30, இரவு 8:00 மணி (ஆங்கிலம்)



## தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்

ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமை காலைத் தமிழ் திருப்பலி முடிந்ததும், நமது ஆலயத்தில் தமிழில் மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. உங்கள் பிள்ளைகளும் ஞானத்தில் வளர அனுப்பி வையுங்கள்.




## ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணி

**நாள்: 27-05-2019, ஞாயிறு மதியம் 2:30 மணி**

ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு, நமது ஆலயம் மதியம் 2:30 முதல் 4:00 மணிவரை மூடப்பட்டிருக்கும்.
வாருங்கள்! நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

## GIFT திட்டத்திற்காக இரண்டாம் காணிக்கை

இவ்வாரயிறுதித் திருப்பலிகளில் எடுக்கப்படும் இரண்டாம் காணிக்கை, நமது உயர்மறைமாவட்டத்தின் GIFT (நம்பிக்கையுடனும் நன்றியுணர்வோடும் கொடுத்தல்) திட்டத்திற்காக வழங்கப்படும். இக்காணிக்கையானது, நம் உயர்மறைமாவட்டத்தில் செயற்படும் பல்வேறு அமைப்புக்களுக்காகவும், கட்டிடத் திட்டங்களுக்காகவும் பயன்படுத்தப்படும். தாராள மனதுடன் கொடுக்கும் உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

## இடைவிடா சகாய அன்னை நவநாள்



**சனிக்கிழமைகளில்** இரவு 8:30 மணிக்குத் தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்வியநற்கருணை ஆசீரும் நடைபெறும். நம் அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெறவும், திவ்விய நற்கருணையில் இறைப்பிரசன்னம் காணவும் அனைவரும் வருக!

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதல் வாசகம்:** | திருத்தூதர் பணி 14:21-27 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 145: 8-13. |
| **பதிலுரை:** | என் கடவுளே, உம்மைப் புகழ்ந்து ஏத்துவேன்! |
| **இரண்டாம் வாசகம்:** | திருவெளிப்பாடு 21:1-5 |
| **வாழ்த்தொலி:** | அல்லேலூயா, அல்லேலூயா! 'ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்' என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா. |
| **நற்செய்தி வாசகம்:** | யோவான் 13:31-33,34-35 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி (ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

